



# சக்கரவியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 290 | 13.04.2026 | MONDAY | PANGUNI: 30 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 290 | 13.04.2026 | திங்கள்கிழமை | பங்குனி : 30 | விலை : ரூ.5/- |


## வெற்றியை உறுதிசெய்யும்

# "உழைப்பை எதிர்பார்க்கிறேன்!"

## தொண்டர்களுக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை: ஏப்.13-

"ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியம். 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்பதை உறுதி செய்யும் உழைப்பை உடன்பிறப்புகள் வழங்கினால் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிதான். அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்" என்று தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவுக்கு இன்னும் பத்து நாட்களே உள்ளன. செல்லும் இடம் எங்கும் கழக உடன்பிறப்புகளின் எழுச்சியைக் காண்கிறேன். தமிழ்நாட்டு மக்களிடம் மகிழ்ச்சியைக் காண்கிறேன்.

ஐந்து ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் ஒவ்வொன்றும் மக்களுக்குத் தந்திருக்கக் கூடிய பயனும், தொடரவிருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் நாம் நிறைவேற்றவிருக்கும் சாதனைத் திட்டங்களின் மீதான மக்களின் எதிர்பார்ப்பும் அனைத்து தொகுதிகளிலும் வெளிப்படுகிறது.

தேர்தல் களத்தில் திமுக தொண்டர்களின் பணி என்பது எதிரிகளாலும் வியந்து பார்க்கக் கூடியது என்பதே நம் வரலாறு. கடந்த ஓராண்டுக்கு மேலாக தமிழ்நாட்டில் உள்ள 75,000 பாகங்களிலும் கழக உடன்பிறப்புகள் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து வந்திருக்கிறார்கள். மக்களுடனான நம் உறவு எப்போதும் தொடர



வேண்டும். குறிப்பாக இனிவரும் 10 நாட்களும் மக்களோடு மக்களாக உடன்பிறப்புகள் களப்பணி ஆற்ற வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீடு வீடாக சென்று துண்டறிக்கைகளை வழங்கி வாக்குகளைச் சேகரிப்பதில் முழுமையான கவனம் செலுத்துவதுடன், கூட்டணிக் கட்சியினர் போட்டியிடும் தொகுதிகளிலும் உங்களில் ஒருவனான நானே நிற்கிறேன் என்ற எண்ணத்துடன் களப்பணியாற்றி வெற்றியை உறுதி செய்ய வேண்டும்.

92 வயது நிறைந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கடும் வெயிலிலும் பரப்புரை செய்கிறார். அகவை 80ஐ தாண்டிய அண்ணன் சிதம்பரமும், அண்ணன் வைகோவும் மூலைமுடுக்கெல்லாம் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என்பதன் அருமையை விளக்கி வருகின்றனர்.

87 வயதான நம் கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் துரைமுருகனும், 28 வயதே ஆன அவிநாசி கழக வேட்பாளர் டாக்டர் கோகிலாமணியும் பம்பரமாகக் களத்தில் சுழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் பணியாற்றி வருகிறார்கள்.

உடன்பிறப்புகளான உங்களின் உழைப்பின் மீது உள்ள நம்பிக்கையில் உறுதியுடன் சொல்கிறேன், இந்த தேர்தல் களத்தில் நாம்தான் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்போம். இதை மக்கள் முடிவு செய்து விட்டார்கள். குறிப்பாகத் தமிழ்நாட்டு பெண்கள் முகத்தில் வெளிப்படும் மலர்ச்சியும், இளைஞர்களின் மனதில் உள்ள நம்பிக்கையும், சிறுபான்மைச் சமுதாயத்தினர் உள்ளிட்ட அனைத்து மக்களின் ஆதரவும் நமது வெற்றிக்கு அடித்தளமாக உள்ளன. வாக்குப்பதிவு நாளில் அதை வெற்றியாகக் கட்டி எழுப்ப வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

முற்றிய நெற்கதிரைக் கவனமாக அறுவடை செய்வதுதான் தேர்தல் களப்பணி என நம் உயிர்நிகர் தலைவர் கருணாநிதி பலமுறை சுட்டிக்காட்டி இருக்கிறார். அதைத்தான் உங்களில் ஒருவனான நானும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியம். 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' என்பதை உறுதி செய்யும் உழைப்பை உடன்பிறப்புகள் வழங்கினால் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிதான். அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்.

ஒற்றுமையாகவும் ஒருங்கிணைப்புடனும் உடன்பிறப்புகள் ஓயாது உழைக்கிறார்கள் என்ற செய்தி என் காதுக்கு வரும்போது எல்லாம் நான் உற்சாகத்துடன் உங்களை மிஞ்சும் உழைப்பை வழங்கும் ஆற்றலைப் பெறுகிறேன்.

கொளுத்தும் வெயிலையும், கோடை மழையையும் பொருட்படுத்தாமல் களத்தில் பணியாற்றுகின்ற உடன்பிறப்புகளுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சலிக்காமல் உழைப்பதில் நம் உடன்பிறப்புகளுக்கு நிகர் யாருமில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கின்ற உங்கள் உழைப்பினால், தோழமைக் கட்சியினருடன் ஒருங்கிணைந்து நீங்கள் ஒற்றுமையாக ஆற்றுகின்ற பணியினால், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியை உறுதி செய்து, இந்தியாவுக்கே வழிகாட்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சியை நம் உயிர்நிகர் தலைவர் கருணாநிதியின் உடன்பிறப்புகள் அமைத்துக் காட்டினார்கள் என்ற பெருமையை விட உங்களில் ஒருவனான எனக்கு வேறென்ன வேண்டும்! என தெரிவித்துள்ளார்.

## நெல்லுக்கான ஊக்கத்தொகை விவகாரம்
## "ஸ்டாலின் கூறுவது உண்மையல்ல"

புது டெல்லி, ஏப்.13-

'நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு உத்தரவிட்டதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் விவசாயிகளை திசைதிருப்பும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட உண்மைக்கு புறம்பான திரிபு' என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பான, அரசியல் உள்நோக்கம் கொண்ட, தமிழக விவசாயிகளை திசைதிருப்பும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு திரிபு என்பது தெளிவாகிறது.

தமிழகத்திற்கு மட்டுமல்ல, அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட தகவல், மாநில அரசுகள் வழங்கும் ஊக்கத்தொகை கொள்கைகளை தேசிய முன்னுரிமைகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற ஒரு ஆலோசனையே ஆகும். மத்திய அரசின் இந்த ஆலோசனை, பயிர் பல்வகைப்படுத்துதலை (Crop Diversification) ஊக்குவித்தல் மற்றும் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றில் சுயசார்பு அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஆக்கப்பூர்வமான மற்றும் தொலைநோக்குப் பார்வையாகும். இதன் மூலம், உள்நாட்டுத் தேவை அதிகமாக உள்ள பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து, அதிக லாபத்தைப் பெற வழிவகை செய்யப்படும்.

குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு (MSP) மேல் ஊக்கத்தொகை அல்லது போனஸ் அறிவிப்பது என்பது எப்போதும் மாநில அரசுகளின் தனிப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டது. அந்த அதிகாரத்தை யாரும் பறிக்கவில்லை. முதல்வர் ஸ்டாலின், தேச நலனில் அக்கறை கொண்டு ஆக்கப்பூர்வமாகச் செயல்படுவதற்குப் பதிலாக, தங்களின் குறுகிய சுயநல அரசியல் ஆதாயத்திற்காகத் திட்டமிட்டுத் திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

தேசம் தீர்வுகளைத் தேடும்போது, திமுக சர்ச்சைகளை உருவாக்குகிறது. மத்திய அரசு ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை நல்கும்போது, திமுக அதைத் தேர்தல் அரசியலுக்காகச் சுரண்டப் பார்க்கிறது. அரசியலமைப்புச் சட்டப்படி உயர் பதவியில் இருக்கும் ஒரு முதல்வருக்கு இத்தகைய நடத்தை அழகல்ல. தமிழக விவசாயிகள் தங்கள் கவலைகளையே வாக்குகளுக்காக ஆயுதமாக்கும் அரசை அல்ல, மாறாக தங்கள் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக உழைக்கும் அரசையே எதிர்பார்க்கிறார்கள்.

எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள ஒவ்வொரு விவசாயிக்காகவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசு சோர்வின்றித் தொடர்ந்து பணியாற்றும். இத்தகைய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பிரச்சினைகளால் நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்" எனத் தெரிவித்தார்.

## கடல் கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்க முடியாததால்
## ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதில் சிக்கல் நீடிப்பு

டெஹ்ரான், ஏப்.13-

கடல் கண்ணி வெடிகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியாததால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

அமெரிக்கா உடனான போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் நூற்றுக்கணக்கான கண்ணி வெடிகளை ஈரான் ராணுவம் வீசியுள்ளது. குறிப்பாக கடலுக்கு அடியிலும், சில நூறு அடி ஆழத்திலும் கடலுக்கு மேலேயும் கண்ணி வெடிகள் வீசப்பட்டன. இதனால் சரக்குக் கப்பல் போக்குவரத்து முடங்கி உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எரிவாயுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்கா ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டிருக்கிறது. இதன் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை உடனயாக திறக்க வேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது. இதைத் தொடர்ந்து கடலுக்கு மேலே மிதந்த கண்ணிவெடிகளை ஈரான் ராணுவம் அகற்றி உள்ளது. ஆனால் கடலுக்கு அடியிலும் சில நூறு அடி ஆழத்திலும் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எங்கெல்லாம் கண்ணிவெடிகள் வீசப்பட்டன என்பது குறித்தும் தெளிவான விவரங்கள் இல்லை.

இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறப்பதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக ஈரான் அரசு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், வழக்கமான ஹார்முஸ் ஜலசந்தி பாதையைத் தவிர்க்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதோடு எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பது தொடர்பான வரைபடத்தையும் வெளியிட்டிருக்கிறது. இந்தப் பாதை வழியாக நேற்று முன்தினம் 10 எண்ணெய் கப்பல்கள் மட்டும் கடந்து சென்றன.

இதுகுறித்து சர்வதேச பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது: ஈரான் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதலை தொடங்கிய உடன், ஈரான் ராணுவத் தரப்பில் ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் சிறிய ரக படகுகள் மூலம் கடல் கண்ணிவெடிகள் வீசப்பட்டன. அவற்றை முறையாக அகற்றும் தொழில்நுட்பம் ஈரானிடம் இல்லை.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளிடம் மட்டுமே கடல் கண்ணிவெடிகளை அகற்றும் சிறப்பு கப்பல்கள் உள்ளன. ஆனால், அந்த கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் நுழைய ஈரான் ராணுவம் தடை விதித்துள்ளது. இதன் காரணமாக இந்த ஜலசந்தியின் மிக குறுகிய பாதை வழியாகவே கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## "பாஜக 'புல்டோசரை' தமிழக எல்லையிலேயே தடுத்து நிறுத்துவோம்" : பிருந்தா காரத்

திருவாரூர், ஏப்.13-

அதிமுகவின் பின்னாள் ஒளிந்துகொண்டு பாஜக புல்டோசர் வருவதை தமிழகத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்துவோம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிருந்தா காரத் தெரிவித்துள்ளார்.

திருத்துறைப்பூண்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் க.மாரிமுத்துவுக்கு ஆதரவாக நேற்று இரவு நடைபெற்ற பொதுகூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிருந்தா காரத், "இடதுசாரிக் கட்சிகள் போட்டியிடும் 10 தொகுதிகள் எங்களிடம் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக அரசு ஆற்றியுள்ள பணிகளின் அடிப்படையில், நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு




உள்ளது.

எங்கள் கூட்டணி மிகவும் வலிமையானது. சந்தேகத்துக்கிடமின்றி இக்கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். அதிமுக பாஜக கூட்டணி முற்றிலும் சந்தர்ப்பவாதக் கூட்டணி. எவ்விதக் கொள்கை அடிப்படையும் இன்றி அமைந்துள்ளது. அதிகார வேட்கையைத் தவிர, இவ்விரு கட்சிகளுக்கும் இடையே பொதுவான அம்சம் வேறு என்ன இருக்க முடியும்? பாஜகவின் அடிப்படைச் சித்தாந்தங்களுக்கு முற்றிலும் முரணான கருத்துக்களைக் கூட, அதிமுகவினர் அதிகாரத்துக்காக பேசி வருகின்றனர்.

நாடு முழுவதும் இந்திய அரசியலமைப்பைத் தனது 'புல்டோசணீர்' கொண்டு நசுக்கி வருகிறது பாஜக. துரதிருஷ்டவசமாகவும், வன்மையாகக் கண்டிக்கத்தக்க வகையிலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிமுக கட்சியானது இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்துக்கும் எதிராகச் செயல்பட்டுக்கொண்டு பாஜக இங்கு காலூன்றுவதற்கு வழிவகை செய்து வருகிறது.

இந்த 'புல்டோசர்' அணுகுமுறை இந்தியாவையே சீரழித்து வருகிறது. எனவே, இடதுசாரிக் கட்சிகளாகிய நாங்கள் திமுகவுடன் இணைந்து செயல்பட்டு, இந்த அதிமுகவின் பின்னாள் ஒளிந்துகொண்டுள்ள பாஜக 'புல்டோசர்' தமிழ்நாட்டுக்குள் வருவதை மாநிலத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்படுவதை உறுதி செய்வோம். மேலும், திமுக தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் சிறப்பான வளர்ச்சியை முன்னெடுப்பதை உறுதி செய்வோம்" என தெரிவித்தார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# கெட்ட வார்த்தைகளைப் பேசினால் ரூ.500 அபராதம் விதிக்கும் ம.பி. கிராமம்




போபால், ஏப்.13-

மத்திய பிரதேசத்தின் பர்ஹான்பூர் மாவட்டம் போர்சர் கிராமத்தில் தரக்குறைவான வார்த்தைகளைப் பேசினால் ரூ.500 அபராதம் அல்லது ஒரு மணி நேரம் கட்டாயத் துப்புரவுப் பணி என்ற விதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான முடிவு கிராம பஞ்சாயத்தால் ஒருமனதாக எடுக்கப்படுள்ளது.

இந்த விதிமுறை தொடர்பான சுவரொட்டிகள் கிராமம் முழுவதும் ஒட்டப்பட்டுள்ளன. பொது நடத்தையை ஒழுங்குபடுத்தவும், தரக்குறைவான வார்த்தை பயன்பாட்டால் ஏற்படும் மோதல்களைக் குறைக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கிராமத் துணைத் தலைவர் வினோத் ஷிண்டே கூறுகையில், "குழந்தைகள், பெரியவர்கள் ஆகிய இரு தரப்பினர் மத்தியிலும் பரவலாக இழிவான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

முன்பு தாய் மற்றும் சகோதரிகளுக்கு எதிரான இழிவான சொற்களை அடிக்கடி பயன்படுத்தினர். இப்போது, அவ்வாறு செய்பவர்கள் ரூ.500 அபராதம் செலுத்த வேண்டும் அல்லது கிராமத்தில் ஒரு மணி நேரம் துப்புரவுப் பணி செய்ய வேண்டும்.

இந்த முயற்சி நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. கிராம மக்கள் தங்கள் வார்த்தைகளில் அதிக கவனத்துடன் இருக்கின்றனர். இந்த முயற்சிக்கு அண்டை கிராமங்களில் இருந்தும் பாராட்டுகள் கிடைத்துள்ளன" என்றார்.

இந்த கிராமத்து இளைஞன் அஷ்வின் பாட்டீல் கூறுகையில், "ம.பி.யில் இத்தகைய ஒரு முயற்சி எடுக்கப்பட்டது இதுவே முதல்முறை. கிராமத்தில் 12, 13 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பயன்படுத்தும் தகாத வார்த்தைகள் சில சமயம் பெரிய தகராறில் சென்று முடிகின்றன.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எனக்கு இந்த யோசனை தோன்றியது. பிறகு ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் மற்றும் பிறருடன் விவாதிக்கப்பட்டது. இதையடுத்து 'வசைமொழி இல்லா கிராமத்தை' நிறுவும் முடிவு முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது. நாங்கள் அனைவரும் இதற்கான உறுதிமொழியை ஏற்றுள்ளோம், மேலும் இந்த முயற்சி குறித்த முறையான சுற்றறிக்கையும் பஞ்சாயத்தால் வெளியிடப்பட்டுள்ளது" என்றார்.

# 8 ஆண்டுகளாகக் கிடப்பில் கிடக்கும் NH 744 திட்டம்; விவசாயிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்குமா பாஜக?



தென்காசி, ஏப்.13-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக பாஜக சார்பில் ஆனந்தன் அய்யாச்சாமி என்பவர் நிறுத்தப்பட்டு, வாக்குகள் சேகரித்து வருகிறார்.

இந்நிலையில் பாஜக வேட்டாளரான ஆனந்தன் அய்யாச்சாமியை, என்ஹெச் 744 நஞ்செய் மீட்பு மற்றும் சாலை மாற்றி அமைப்பு குழுவின் தலைமை ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஜாபர் ஜெயராமன் தலைமையில் வாசுதேவநல்லூர் மற்றும் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் சிவகிரி அருகே உள்ள விஸ்வநாத பேரி பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் வேட்பாளரை சந்தித்து என்ஹெச் 744 நெடுஞ்சாலையை விவசாய நிலத்தை பாதிக்காத வகையில் சிவகிரியில் இருந்து செங்கோட்டை வரையில் மாற்று பாதையில் நெடுஞ்சாலை அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

744 நான்கு வழி சாலை திட்டம் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் ஆனநிலையில் இந்த திட்டமானது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இரண்டாவது பிரிவில் வாசுதேவநல்லூர் இருக்கிறது இது ராஜபாளையத்தில் இருந்து செங்கோட்டை வரை உள்ளது. தற்போது எந்த ஒரு முன்னெடுப்பும் இல்லாமல் கிடக்கிறது. முந்தைய அரசிடம் கோரிக்கை வைத்தும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எங்களை அழைத்தும் பேசவில்லை.

அதேபோன்று நான்கு வழி சாலை என்பது வேண்டாம் என்பது எங்களது கோரிக்கை அல்ல சாலை என்பது எவ்வளவு முக்கியம் என்பது எங்களுக்கு நன்றாக தெரியும். நகரத்தின் உள் கட்டமைப்பு வளர்ச்சி அடையும். தென்காசி மாவட்டத்தில் இரண்டு மூன்று போகம் நெல் விளையக்கூடியது மேற்கு தொடர்ச்சி மலையோட அடிவாரத்தில் மட்டும் தான் இருக்கு ரோடு எங்கேயும் போடலாம் ஆனால் வேறொரு இடத்தில் விவசாயம் செய்ய முடியாது எனவும் நஞ்செய் மீட்பு மற்றும் சாலை மாற்றி அமைப்பு குழுவின் தலைமை ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஜாபர் ஜெயராமன் தெரிவித்தார்.

# "ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களை பல மாநில முதல்வர்களும் பின்பற்றுகின்றனர்" வைகோ



திருவாரூர், ஏப்.13-

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களை பல மாநில முதல்வர்களும் பின்பற்றுவதாக வைகோ புகழாரம் சூட்டிப் பேசினார்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு, நன்னிலம் தொகுதி திமுக வேட்பாளர் முகமது முபாரக்கை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அப்போது திருவாரூர் திமுக வேட்பாளர் பூண்டி கலைவாணனும் பங்கேற்று வாக்கு சேகரித்தார்.

அப்போது வைகோ பேசியதாவது: தஞ்சை சோழ மண்டலத்தை காப்பதற்காக, தமிழ்நாட்டின் வளங்களைப் பாதுகாப்பதற்காக நான் திமுகவை ஆதரித்து வாக்கு சேகரிக்க வந்திருக்கின்றேன். சமத்துவ, சகோதரத்துவ நாடாக தமிழகத்தை ஆண்ட ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும்.

பல மாநில முதல்வர்கள் கலந்துகொண்ட இந்தியா கூட்டணி கூட்டத்தில், தமிழக முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றிய திட்டங்களை பின்பற்ற விரும்புவதாக தெரிவித்ததாக அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டனர். அந்த அளவுக்கு திறமையான ஆட்சியை நடத்தி வருகின்றார். திராவிட இயக்கத்துக்கு எந்தக் கேடும் நேராமல் பார்த்துக் கொள்வது என் கடமை என்றார்.

# ஆழ்துளை கிணற்றில் விழுந்த 2 வயது சிறுவன் சடலமாக மீட்பு



போபால், ஏப்.13-

மத்திய பிரதேசத்தின் உஜ்ஜைனி மாவட்டம், பத்நகர் தாலுகா, ஜலாரியா கிராமத்தில் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் பாகீரத் என்ற 2 வயது சிறுவன் 200 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்தான். தகவல் அறிந்து மத்திய, மாநில பேரிடர் மீட்புப் படையினர் அங்கு விரைந்து சென்றனர். சிறுவனை உயிருடன் மீட்க தீவிர முயற்சி மேற்கொண்டனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், "தண்ணீர் நிரம்பிய ஆழ்துளைக் கிணற்றில் 75 அடி ஆழத்தில் சிறுவன் இருப்பதை மீட்புக் குழுவினர் கண்டறிந்தனர். நிலத்தில் பாறைகள் இருந்ததால் ஆழ்துளைக் கிணற்றுக்கு இணையாக சுரங்கம் தோண்டும் பணி வெற்றி பெறவில்லை. சிறுவனின் கைகளில் ஒரு மீட்பு வளையத்தை மாட்டி, அவனை மேலே இழுப்பதற்கான முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை. இறுதியில் சிறுவனை சடலமாகத்தான் மீட்க முடிந்தது" என்றனர்.

இந்த அலட்சியத்துக்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். சிறுவன் உயிரிழப்புக்கு ம.பி. முதல்வர் மோகன் யாதவ் இரங்கல் தெரிவித்துள்ளார். சிறுவனின் பெற்றோருக்கு ரூ.4 லட்சம் நிதியுதவி அறிவித்துள்ளார்.

# 12 மாநிலங்களில் 6 கோடி வாக்காளர்கள் நீக்கம்



புதுடெல்லி, ஏப்.13-

உத்தர பிரதேசம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, ராஜஸ்தான், சத்தீஸ்கர், கேரளா, குஜராத், மத்திய பிரதேசம், கோவா ஆகிய 9 மாநிலங்கள், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவு ஆகிய 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) பல்வேறு கட்டங்களாக நடைபெற்றது. இப்பணி முற்றிலும் முடிவடைந்த நிலையில், இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபர் 27ம் தேதி எஸ்ஐஆர் பணி தொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அப்போது, இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வாக்காளர் எண்ணிக்கை சுமார் 51 கோடியாக இருந்தது. எஸ்ஐஆர் நடவடிக்கைக்குப் பிறகு, வாக்காளர் எண்ணிக்கை சுமார் 44.92 கோடியாக உள்ளது. இது 6.08 கோடி குறைவு.

முதல்கட்டமாக பிஹாரில் எஸ்ஐஆர் பணி நிறைவடைந்தது. இதையடுத்து, 2ம் கட்டமாக மேற்கூறிய 9 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எஸ்ஐஆர் பணி நிறைவடைந்துள்ளது. அசாம் மாநிலத்தில், எஸ்ஐஆர்க்குப் பதிலாக ஒரு சிறப்புத் திருத்தம் பிப்ரவரி 10ம் தேதி நிறைவடைந்தது.

இப்போது நடைபெற்று வரும் 5 மாநில தேர்தல் முடிவடைந்த பிறகு, மீதமுள்ள 17 மாநிலங்கள் மற்றும் 5 யூனியன் பிரதேசங்களில் எஸ்ஐஆர் பணி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தவெக பிரச்சார வாகனத்தின் மீது கல்வீச்சு திமுக நிர்வாகிகள் மூவர் மீது வழக்குப் பதிவு




சென்னை, ஏப்.13-

விருகம்பாக்கம் சட்டப்பேரவைத் தொகுதியில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில், சபரிநாதன் போட்டியிடுகிறார். இவர் நேற்று முன்தினம் விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட திருவீதி அம்மன் கோயில் சந்திப்பு பகுதியில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார். பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அங்கு வந்த நபர் ஒருவர் திடீரென தவெக பிரச்சார வாகனத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்தினார்.

இதனால், அதிர்ச்சியடைந்த கட்சித் தொண்டர்களும், நிர்வாகிகளும் அந்த நபரை மடக்கிப் பிடித்த போது. "இது திமுகவின் கோட்டை, இங்கே நீங்கள் நுழையக்கூடாது" எனக் கூறி வாக்கு வாதத்தில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. வாக்கு வாதம் முற்றிய நிலையில், கட்சியின் முக்கியப் பொறுப்பாளர் ராமச்சந்திரனை அந்த நபர் கல்லால் தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக, தவெக வழக்கறிஞர் பிரிவு இணை ஒருங்கிணைப்பாளர் பாண்டியராஜன் கோயம்பேடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில், இச்சம்பவத்தில் தொடர்புடைய திமுக நிர்வாகிகள் 3 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர். இது தொடர்பாக, போலீஸார் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# "எங்களை அச்சுறுத்திய ஈரான் இப்போது உயிர்பிழைக்கப் போராடுகிறது" நெதன்யாகு

டெல், ஏப்.13-

அவிவ்: அமெரிக்கா ஈரான் பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில், "நம்மை முற்றிலுமாக அழித்துவிடுவோம் என்று ஈரான் அச்சுறுத்தியது. ஆனால், இப்போது அவர்களே உயிர் பிழைக்கப் போராடுகிறார்கள்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "ஈரானுக்கு எதிரான நடவடிக்கை மூலம், அவர்களின் அணு ஆயுதம் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்களை நசுக்குவதில் வெற்றி பெற்றுள்ளோம். இந்த நடவடிக்கை இன்னும் முடிவடையவில்லை, ஆனால் நாம் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்துள்ளோம் என்பது ஏற்கெனவே தெளிவாகியுள்ளது.

காசாவில் ஹமாஸ், லெபனானில் ஹிஸ்புல்லா, சிரியாவில் அசாத் ஆட்சி, ஈராக்கில் உள்ள போராளிக் குழுக்கள், ஏமனில் ஹவுதிகள் என ஈரான் நம் கழுத்தை நெரித்துச் சுற்றி வளைக்க முயன்றது. ஆனால் நாம் தான் அவர்களின் கழுத்தை நெரிக்கிறோம். அவர்கள் நம்மை முற்றிலுமாக அழித்துவிடுவதாக அச்சுறுத்தினார்கள். ஆனால், இப்போது அவர்களே உயிர்பிழைக்கப் போராடுகிறார்கள்" என்று கூறினார்.

பாகிஸ்தானில் அமெரிக்காவும் ஈரானும் நேற்று பேச்சுவார்த்தை நடத்திய நிலையில், நெதன்யாகுவின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்தன. அமெரிக்கா ஈரான் இடையிலான இந்தப் பேச்சுவார்த்தை எந்த முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

# பூமிக்கு பத்திரமாகத் திரும்பிய 4 விண்வெளி வீரர்கள்

## ஆர்டெமிஸ்2 நிலவு பயணம் வெற்றி



கலிபோர்னியா, ஏப்.13-

நிலவைச் சுற்றிவர கடந்த 1ம் தேதி ஆர்டெமிஸ் 2 விண்கலத்தில் புறப்பட்ட நாசா குழுவினர், நேற்று வெற்றிகரமாக பூமி திரும்பினர்.

சுமார் 50 ஆண்டு இடைவெளிக்குப் பின் நிலவுக்கு ஆர்டெமிஸ்2 விண்கலம் மூலம் 4 விண்வெளி வீரர்களை நாசா கடந்த 1ம் தேதி அனுப்பியது. இந்த விண்கலத்தில் சென்ற நாசா கமாண்டர் ரீட் வைஸ்மேன், பைலட் விக்டர் க்ளேவர், கிறிஸ்டினா கோச், கனடா விண்வெளி வீரர் ஜெரிமி ஹேன்சன் ஆகியோர் நிலவில் தரையிறங்காமல் விண்வெளியில் நீண்ட தூரம் பயணம் செய்து நிலவை அருகில் சுற்றி வீடியோ, படங்கள் எடுத்தனர்.

நிலவுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று அதிகாலை 5 மணியளவில் ஆர்டெமிஸ்2 விண்கலம் பூமி திரும்பியது. பாராசூட்கள் மூலம் கலிபோர்னியா கடல் பகுதியில் விழுந்து மிதந்த ஆர்டெமிஸ்2 விண்கலத்தை அமெரிக்கக் கடற்படை வீரர்கள் மீட்டனர். விண்கலத்திலிருந்து படகில் இறக்கப்பட்ட 4 விண்வெளி வீரர்களும் ஹெலிகாப்டர் மூலம் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் யுஎஸ்எஸ் ஜான் பி.முர்தாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். விண்வெளி வீரர்கள் நலமுடன் உள்ளனர்.

ஆர்டெமிஸ்2 திட்டத்தின் அசோசியேட் நிர்வாகியாக இருப்பவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விஞ்ஞானி அமித் ஷத்ரியா. அமெரிக்காவில் படித்து வளர்ந்த அமித், கடந்த 2003ம் ஆண்டு நாசாவில் இணைந்தார். விண்கலங்களின் செயல்பாடுகள், ரோபோட்டிக்ஸ் இன்ஜினீயரிங், சர்வதேச விண்வெளி மையத்துக்குத் தேவையான உதவிகளை அளிப்பது ஆகிய பிரிவில் பணியாற்றினார். கடந்த 2021ம் ஆண்டிலிருந்து நிலவுக்குப் பயணம் மேற்கொள்ளும் ஆர்டெமிஸ் 2 திட்டத்தில் பணியாற்றி வந்தார்.

அமித் ஷத்ரியா அளித்த பேட்டியில், "நிலவுக்குச் சென்று திரும்பும் பாதை இப்போது தெளிவாக உள்ளது. இனி நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஏராளம். நிலவில் தளம் அமைக்கும் ஆய்வு மேற்கொள்ளும் பணியை நாங்கள் முடிப்போம்" என்றார்.

# "மகளிர் உரிமைத் தொகை முதல் இலவச மின்சாரம் வரை.. பட்டியலிட்டு வாக்குச் சேகரித்த வெங்கடேசன்!



சமயநல்லூர்.ஏப்.13-

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே உள்ள வயலூர் ஊராட்சியில் சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அவர் பேசியது திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு நலத்திட்டங்கள் தமிழக முதல்வர் வழங்கி வருகிறார் குறிப்பாக கூற வேண்டும் என்றால் மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி மகளிருக்கு விடியல் பயணம் பேருந்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகை முதியோர் உதவித்தொகை விவசாயிகளுக்கு இலவசமின்சாரம் மாற்றுத்திறனாளிகளுக்கு, நலத்திட்ட உதவிகள் மற்றும் இலவச இருசக்கர வாகனம் உள்ளிட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திராவிட மாடல் அரசு தொடரவும் சோழவந்தான் தொகுதியில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்திடவும், வருகின்ற 23ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் மறந்திடாமல் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து என்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று தெரிவித்தார். தொடர்ந்து அம்பலத்தடி , சிறுவாலை, செல்லக்கவுண்டன்பட்டி, பிள்ளையார்நத்தம்,

வைரவநத்தம், சமயநல்லூர் தோடனேரி, மூலக்குறிச்சி, விட்டங்குளம்

உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். அவருக்கு பெண்கள் மலர் தூவி ஆரத்தி எடுத்து வரவேற்பு கொடுத்தனர். அருகில் திமுக ஒன்றிய செயலாளர் தனசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பார்த்தசாரதி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்பரமேஸ்வரி செல்லமுத்து,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சித்ராதேவிமுருகன்,

திமுக கிளைச் செயலாளர்சீனிவாசன்,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் தமிழாளன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக உள் மாவட்டங்களில் ஏப்.16 வரை அதிகபட்ச வெப்பநிலை 5 டிகிரி உயரும்




சென்னை, ஏப்.13-
தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை நாளை முதல் 16ம் தேதி வரை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை வெப்பநிலை அதிகமாக இருக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், “வடக்கு மத்தியப் பிரதேசம் முதல் தென் தமிழகம் வரை விதர்பா, மத்திய மகாராஷ்டிரா, மரத்வாடா மற்றும் உள் கர்நாடகா வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.13) முதல் 18ம் தேதி வரை கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 16ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

கடலோர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டம் அடையாமடை, தென்காசி மாவட்டம் ஆயிக்குடியில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்மா ஆட்சியில் நிம்மதி; இந்த ஆட்சியில் அதர்மம்! பாலமேட்டில் அதிமுக வேட்பாளர் மாணிக்கம் அனல் பறக்கும் பிரச்சாரம்!




அலங்காநல்லூர் ஏப். 13-
மதுரை மாவட்டம் பாலமேடு பகுதியில், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் திரு. மாணிக்கம் இரட்டை இலை சின்னத்திற்கு ஆதரவாகத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

*ஆட்சி விமர்சனம்:* "கடந்த அதிமுக ஆட்சியில் மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். ஆனால், இன்று தமிழகத்தில் ரவுடிசம், கட்டப்பஞ்சாயத்து மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள் மலிந்து கிடக்கின்றன. இதனைத் தடுக்க வேண்டிய முதல்வர் வேடிக்கை பார்க்கிறார்" எனக் குற்றம் சாட்டினார்.

*சாதனைப் பட்டியல்:* எடப்பாடியார் ஆட்சியில் வழங்கப்பட்ட ரூ. 2,500 பொங்கல் பரிசு மற்றும் 'தாலிக்கு தங்கம்' (ரூ. 50,000) போன்ற திட்டங்களை நினைவுகூர்ந்து, மீண்டும் அதே போன்ற பொற்கால ஆட்சி அமைய இரட்டை இலைக்கு வாக்களிக்கக் கேட்டுக்கொண்டார்.

மகாலட்சுமி மாணிக்கத்தின் உருக்கமான பேச்சு:
வேட்பாளரின் மனைவி மகாலட்சுமி பேசுகையில், "தனது கணவர் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொகுதி மக்களுக்காகவே வாழ்ந்தவர். எத்தனையோ இன்னல்கள் வந்தபோதும் துணிவுடன் மக்கள் பணியாற்றிய அவருக்கு, இப்பகுதி மக்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். அவர் வெற்றி பெற்று கோட்டையில் எடப்பாடியார் அமரும்போது அவருக்குப் பக்கபலமாக இருப்பார்" என உணர்ச்சிப்பூர்வமாக வேண்டுகோள் விடுத்தார்.

இதில் அதிமுக ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன் நகர செயலாளர் அழகுராஜ், வி.கே.குமார்,வாடிப்பட்டி டாக்டர் அசோக்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத், பேரூராட்சி துணை தலைவர் ராமராஜ் ,நகரப் பொருளாளர் சுந்தரராகவன், இணைச் செயலாளர் புளியம்மாள், நிர்வாகிகள் சேகர், விஜயகுமார், எஸ்.எஸ்.கண்ணன் குணசேகரன், திவாகர், வாடிப்பட்டி வேல்முருகன்,பாஜக மண்டல தலைவர் முனீஸ்வரி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவின் உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி ஒரு மாதத்தில் 40%லிருந்து 60% ஆக உயர்வு




புதுடெல்லி, ஏப்.13-
இந்தியாவின் எல்பிஜி உள்நாட்டு உற்பத்தி ஒரு மாதத்துக்குள் 40 சதவீதத்தில் இருந்து 60% ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் சுஜாதா சர்மா கூறும்போது, ‘‘இந்தியாவிடம் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. நமது சுத்திகரிப்பு நிலையங்கள் அவற்றின் முழுத் திறனில் இயங்கி வருகின்றன. திரவமயமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவின் (எல்பிஜி) உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. இது நமது தேவையில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது’’ என்றார்.

சமீபத்திய தரவுகளின் படி, 202526ம் ஆண்டில் இந்தியாவின் வருடாந்திர எல்பிஜி நுகர்வு 3.3 கோடி டன்களாக இருந்தது. பிப்ரவரி 28ல் வெடித்த மேற்கு ஆசியப் போர் காரணமாக ஏற்பட்ட விநியோகத் தடைகளால், மார்ச் மாதத்தில் எல்பிஜி நுகர்வு கடுமையாகக் குறைந்துள்ளதாக மாதாந்திர தரவுகள் காட்டுகின்றன. போருக்கு முன்பு, இந்தியா தனது எல்பிஜி தேவையில் 60 சதவீதத்தை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்தது. இதில் பெரும்பகுதி மேற்கு ஆசியாவில் இருந்து, குறிப்பாக கத்தாரில் இருந்து இறக்குமதியானது.

எல்பிஜி நுகர்வு ஜனவரியில் 30 லட்சம் டன்னாகவும், பிப்ரவரியில் 28 லட்சம் டன்னாகவும் இருந்தது. இது மார்ச் மாதத்தில் 23.79 லட்சம் டன்னாகக் குறைந்தது. இது ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 26.6% சரிவாகும். ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் இருந்தும் எல்பிஜியை இந்தியா இறக்குமதி செய்கிறது.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாகக் கப்பல்கள் செல்லும் பாதையைத் ஈரான் தடுத்ததைத் தொடர்ந்து எல்பிஜி இறக்குமதி கடுமையாகச் சரிந்தது. இதனால், 33.2 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு 100 சதவீத எல்பிஜி விநியோகத்தை உறுதி செய்து, வர்த்தக சிலிண்டரின் விநியோகத்தை மத்திய அரசு குறைத்தது. இதற்கிடையில், எல்பிஜி உற்பத்தியை அதிகரிக்குமாறு இந்திய சுத்திகரிப்பு நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# கடல் கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்க முடியாததால் ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதில் சிக்கல் நீடிப்பு



டெஹ்ரான், ஏப்.13-
கடல் கண்ணி வெடிகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியாததால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

அமெரிக்கா உடனான போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் நூற்றுக்கணக்கான கண்ணி வெடிகளை ஈரான் ராணுவம் வீசியுள்ளது. குறிப்பாக கடலுக்கு அடியிலும், சில நூறு அடி ஆழத்திலும் கடலுக்கு மேலேயும் கண்ணி வெடிகள் வீசப்பட்டன. இதனால் சரக்குக் கப்பல் போக்குவரத்து முடங்கி உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எரிவாயுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்கா ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டிருக்கிறது. இதன் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை உடனயாக திறக்க வேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது. இதைத் தொடர்ந்து கடலுக்கு மேலே மிதந்த கண்ணிவெடிகளை ஈரான் ராணுவம் அகற்றி உள்ளது. ஆனால் கடலுக்கு அடியிலும் சில நூறு அடி ஆழத்திலும் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எங்கெல்லாம் கண்ணிவெடிகள் வீசப்பட்டன என்பது குறித்தும் தெளிவான விவரங்கள் இல்லை.

இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறப்பதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக ஈரான் அரசு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், வழக்கமான ஹார்முஸ் ஜலசந்தி பாதையைத் தவிர்க்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதோடு எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பது தொடர்பான வரைபடத்தையும் வெளியிட்டிருக்கிறது. இந்தப் பாதை வழியாக நேற்று முன்தினம் 10 எண்ணெய் கப்பல்கள் மட்டும் கடந்து சென்றன.

இதுகுறித்து சர்வதேச பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது: ஈரான் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதலை தொடங்கிய உடன், ஈரான் ராணுவத் தரப்பில் ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் சிறிய ரக படகுகள் மூலம் கடல் கண்ணிவெடிகள் வீசப்பட்டன. அவற்றை முறையாக அகற்றும் தொழில்நுட்பம் ஈரானிடம் இல்லை.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளிடம் மட்டுமே கடல் கண்ணிவெடிகளை அகற்றும் சிறப்பு கப்பல்கள் உள்ளன. ஆனால், அந்த கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் நுழைய ஈரான் ராணுவம் தடை விதித்துள்ளது. இதன் காரணமாக இந்த ஜலசந்தியின் மிக குறுகிய பாதை வழியாகவே கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கர்நாடக மலையில் காணாமல் போன கேரள சிறுமி 4 நாட்களுக்கு பின் சடலமாக மீட்பு



பெங்களூரு, ஏப்.13-
கர்நாடக மாநிலம் சிக்கமகளூருவில் காணாமல் போன கேரள சிறுமி 4 நாட்களுக்கு பிறகு 1,500 அடி ஆழ பள்ளத்தாக்கில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கேரள மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த ஸ்ரீநந்தா (15), கடந்த 7ம் தேதி தனது பெற்றோர், உறவினர்கள் 40 பேருடன் கர்நாடகாவுக்கு சுற்றுலா வந்தார். அன்று மாலை 6 மணியளவில் சிக்கமகளூருவில் உள்ள சந்திரோனா மலைப்பகுதிக்கு அனைவரும் சென்று இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தனர். அதன் பிறகு ஸ்ரீநந்தா, மாணிக்தாரா அருவிக்கு அருகில் சென்று புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார். மாலை 7 மணியளவில் இருட்டிய நேரத்தில் ஸ்ரீநந்தா காணாமல் போனது தெரிய வந்தது. இதையடுத்து அவரது பெற்றோர் சிக்கமகளூரு காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

சிக்கமகளூரு காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திரகுமார், வனத்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மீட்புப் படையினர் அடங்கிய 60 குழுக்களை அமைத்து தேடுதல் வேட்டையைத் தொடங்கினார். இரவும் பகலுமாக நடந்த தேடுதல் வேட்டையில், மனிதர்கள் செல்ல முடியாத செங்குத்தான பள்ளத்தாக்குப் பகுதிகளில் தேடுவதற்கு அதிநவீன ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 1,500 அடி பள்ளத்தாக்கில் சிறுமி சடலமாக மீட்கப்பட்டார். அவரது உடலை கண்டு பெற்றோரும் உறவினர்களும் கண்ணீர் விட்டு அழும் காட்சி சோகத்தை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் குறித்து சிக்கமகளூரு காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திரகுமார் கூறுகையில், ‘‘பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு சிறுமியின் உடல் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரது உடலை சொந்த ஊருக்கு கொண்டு செல்வதற்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மரணம் விபத்தாக தெரிந்தாலும், பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகிறோம்'' என்றார்.




# மகளிர் இடஒதுக்கீடு மசோதா விவகாரம்: எதிர்க்கட்சிகள் 15ம் தேதி ஆலோசனை

புதுடெல்லி, ஏப்.13-
நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் 2029ம் ஆண்டு முதல் 33% மகளிர் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தவும், மகளிருக்கு 273 இடங்களை ஒதுக்கும் வகையில் மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 816 ஆக உயர்த்தவும் வழிவகுக்கும் வரைவு மசோதாக்களுக்கு மத்திய அரசு கடந்த 8ம் தேதி ஒப்புதல் வழங்கியது.

இந்த மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க ஏப்.16ம் தேதி முதல் 18ம் தேதி வரை சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தை மத்திய அரசு கூட்டியுள்ளது.

இந்நிலையில் மேற்கு வங்கம், தமிழ்நாடு, அசாம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் வெற்றி பெறவே மகளிர் இடஒதுக்கீடு சட்டம் மற்றும் தொகுதி மறு வரையறை தொடர்பான மசோதாக்களை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத்தை கூட்டி உள்ளதாக காங்கிரஸ் குற்றம்சாட்டி உள்ளது.

இதுதொடர்பாக விவாதிப்பதற்காக ஏப்.15ம் தேதி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆலோசனை நடத்தவுள்ளன. டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த மசோதாவில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

# மேற்கு வங்கமும் மீன் அரசியலும் மாறி மாறி குற்றம் சாட்டும் பாஜக, டிஎம்சி



புதுடெல்லி, ஏப்.13-
பாஜக ஆட்சிக்கு வந்தால் மீன் உண்ணத் தடை வரும் என முதல்வர் மம்தா பானர்ஜி துவக்கிய மீன் அரசியல் தேர்தலில் தொடர்கிறது. மீன் உற்பத்தியில் கவனம் செலுத்தாமல் இறக்குமதி செய்வதாகத் திரிணமூல் காங்கிரஸ் (டிஎம்சி) அரசு மீது பிரதமர் நரேந்திரமோடி புகார் வைத்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தின் பூகோள ரீதியானக் காரணங்களால் அங்கு மீன்கள் உற்பத்தி அதிகம். இதனால், அம்மாநில மக்களின் ஆன்மிக நம்பிக்கையிலும் இடம்பெற்ற மீன் உணவை பிராமணர்களும் உண்பது உண்டு.

இதன் காரணமாக, சட்டப்பேரவைப் பிரச்சாரத்தின் இடையே, மீன் விவகாரத்தை முன்வைத்து முதல்வர் மம்தா பானர்ஜி பாஜகவை கடுமையாகத் தாக்கினார். இதையடுத்து, பாஜகவின் வேட்பாளர்கள் கைகளில் மீன்களுடன் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்கின்றனர்.

இந்த மீன் அரசியல் தொடரும் வகையில் தற்போது பிரச்சாரத்திற்கு வந்த பிரதமர் மோடி, மீன் உற்பத்தியில் டிஎம்சி அரசு போதிய கவனம் செலுத்தவில்லை எனப் புகார் கூறியுள்ளார். இதன் காரணமாக, பாஜக மற்றும் டிஎம்சி ஆகிய இரு கட்சிகளின் பிரச்சாரங்களில் மீன் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஹல்தியாவின் பாஜக தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகையில், ‘மேற்கு வங்க மாநிலத்தின் மீன் வளத்தை முறையாகப் பராமரித்து வளர்ப்பதில் திரிணாமுல் காங்கிரஸ் அரசு தோல்வியடைந்தது.

டிஎம்சி ஆட்சியில் மீன் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. அதேசமயம், பிஹாரில் மீனவர்களின் நலனுக்காக பாஜக பல்வேறு பணிகளை மேற்கொண்டதன் விளைவாக, அங்கு மீன் உற்பத்தி இரு மடங்காக உயர்ந்துள்ளது.

இங்கு மீன்களுக்கான தேவை மிக அதிகமாக இருந்தபோதிலும், அதற்கான உற்பத்தியைப் பெருக்குவதில் டிஎம்சி அரசு தோல்வியடைந்துள்ளது. இதன் காரணமாகவே, மேற்கு வங்க மாநிலம் பிற மாநிலங்களிடமிருந்து மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் மீன் விநியோகத்தை அதிகரிக்கவும், மீன் உற்பத்தியில் தன்னிறைவு அடையவும் டிஎம்சி அரசு எந்தவொரு உறுதியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தேர்தலில் வெற்றி பெற்று பாஜக ஆட்சி அமைத்தால், மேற்கு வங்கத்தை மீன்வளம் மற்றும் கடல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக்கும்.’ எனத் தெரிவித்தார்.

மீன் விவகாரத்தில் தன்னை விமர்சித்த பிரதமர் மோடிக்கு பதிலடி அளிக்கும் வகையில் வடக்கு 24 பர்கானாவின் அகர்பாராவில் மம்தா பானர்ஜி பேசுகையில், ’பிரதமர் மோடி வைக்கும் மீன் மீதானக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானது. பிஹாரில் மீன் உற்பத்தி உண்மையில் அதிகரிக்கவில்லை.

மாறாக அங்கு மீனுக்கான தேவை குறைந்துவிட்டதே இதற்குக் காரணம். பாஜக அரசின் செயல்பாடுகளாலேயே இத்தகைய சூழல் ஏற்பட்டுள்ளது. பிஹாரில் உள்ள மக்களை மீன் சாப்பிடவே நீங்கள் அனுமதிப்பதில்லை. ஆனால் இங்கே, நாங்கள் சந்தைகளில் மீன் வாங்கிச் சாப்பிடுகிறோம். முன்பு ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மீன்களை இறக்குமதி செய்து வந்தோம். தற்போது அந்த இறக்குமதி நிறுத்தப்பட்டுவிட்டது. பிரதமர் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ராஜஸ்தான், பிஹார் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலங்களில் உள்ள மக்களை மீன், முட்டை மற்றும் இறைச்சி சாப்பிட நீங்கள் அனுமதிப்பதில்லை. அத்தகைய பொருட்களை விற்பனை செய்யும் கடைகள் மூடப்பட்டு வருகின்றன.

வங்காள மக்களுக்கு மீன் சாப்பிடுவது எப்படி என்று நீங்கள் பாடம் எடுக்க வேண்டாம். பாஜகவினர் உங்களை மீன் சாப்பிட விடமாட்டார்கள். நீங்கள் இறைச்சி சாப்பிட முடியாது, முட்டை சாப்பிட முடியாது, வங்காள மொழியில் பேச முடியாது. மீறிப் பேசினால், உங்களை 'வங்கதேசத்தவர்' என்று முத்திரை குத்துவார்கள்.’ என தெரிவித்தார்.

ஒரு படி மேலே சென்று பேசிய மத்திய அமைச்சர் சுகந்த் மஜூம்தார், ’பாஜக ஆட்சிக்கு வந்தால், மீன் உண்ணும் பழக்கமுடைய ஒருவரே முதலமைச்சராகப் பொறுப்பேற்பார் என்றும் கூறினார்.

தேர்தல் பிரச்சாரங்களில் பங்கேற்க வரும் பாஜக தலைவர்களை, அவர்கள் செல்லும் பகுதிகளில் முட்டை மற்றும் மீன்களைக் கொண்டு வரவேற்குமாறு தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

சக்கர வியூகம்
13.04.2026 திங்கள்கிழமை



# "படிப்பு முடிந்த கையோடு கையில் வேலைவாய்ப்பு ஆணை

## எஸ். வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில் 17வது ஆண்டு விழா

புளியங்குடி ஏப்.13-

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள எஸ். வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியின் 17வது ஆண்டு விழா மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு ஆணை வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் வி. முருகையா தலைமை வகித்து, சிறப்பாகப் பயின்ற மாணவர்களுக்கும், அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்களுக்கும் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வி.எஸ்.வி.என் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பிரேம் ஆனந்த், இன்றைய நவீன காலச் சூழலுக்கு ஏற்ப மாணவர்கள் தங்களை எப்படித் தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறி, மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு ஆணைகளை வழங்கினார். கல்விக் குழுமங்களின் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி அவர்களின் வழிகாட்டுதலின் படி, பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் இசக்கிமுத்து ஆண்டறிக்கை வாசித்து விழாவைத் தொடங்கி வைத்தார்.

பொறியியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் மணிகண்டன் மற்றும் வளர்ச்சி இயக்குனர் பேராசிரியர் ஜமால் முகமது ஜுபேர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவிற்கான ஏற்பாடுகளை மேலாளர் தங்கப்பன் பிள்ளை, துறைத் தலைவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஒருங்கிணைந்த முறையில் செய்திருந்தனர்.




# சிங்கம் சின்னத்தில் சீறி வரும் வேட்பாளர் தேனி.கே. காளிமுத்து

## திருப்பூர் தொழிலாளர்களுக்குப் பின்னலாடை நல வாரியம்

திருப்பூர் ஏப். 13-

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் தலைமையிலான கூட்டணியில், அகில இந்திய பார்வர்டு பிளாக் வேட்பாளராகப் போட்டியிடும் தேனி.கே. காளிமுத்து 'சிங்கம்' சின்னத்திற்கு ஆதரவாகத் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

*வேட்பாளரின் அதிரடி வாக்குறுதிகள்:* திருப்பூரின் முதுகெலும்பான பின்னலாடைத் தொழிலாளர்களுக்கு எனத் தனியாக 'பின்னலாடை நல வாரியம்' அமைத்துத் தரப்படும். அனைத்து தொழிலாளர்களுக்கும் இலவச மருத்துவக் காப்பீடு அமுல்படுத்தப்படும்" என உறுதி அளித்தார். "முறையற்ற நூல் விலை உயர்வால் நலிவடைந்து வரும் சிறு, குறு தொழில் நிறுவனங்களைக் காக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

நொய்யல் மீட்பு: "சாயக் கழிவுகளால் மாசடைந்துள்ள நொய்யல் ஆற்றை முழுமையாக மீட்டெடுத்து, தூய ஆறாக மாற்றப் பாடுபடுவேன்."அடிப்படை வசதிகள்: குப்பைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு, மாதாந்திர மின் கட்டண முறை, சிலிண்டர் மானியம் மற்றும் குடிநீர் சிக்கல்களைத் தீர்க்க முன்னுரிமை அளிக்கப்படும் எனப் பேசினார்.

பாரப்பாளையம், கே.வி.ஆர். நகர், கருவம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வேட்பாளர் காளிமுத்து வாக்கு சேகரிக்கச் சென்றபோது, பெண்கள் திரண்டு வந்து அவருக்கு ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பார்வர்டு பிளாக் தொண்டர்கள் திரளாகப் பங்கேற்றனர்.



# தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்று திறனாளிகளுக்கான தபால் வாக்குப்பதிவு தொடங்கியது

சென்னை:, ஏப்.13-

மிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்று திறனாளிகளுக்கான தபால் வாக்குப்பதிவு தொடங்கியது. தபால் வாக்கு அளிக்க விண்ணப்பித்தவர்களிடம் வாக்குச்சாவடி அலுவலர்கள் நேரில் சென்று வாக்குகளைப் பெறுகின்றனர். பாதுகாப்புப் பணியில் காவல்துறை அதிகாரிகள் மற்றும் பார்வையாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தச் சிறப்புத் தபால் வாக்குப்பதிவு மூன்று நாட்களுக்கு நடைபெறும்Urban Transit

தமிழ்நாட்டில் 2026 ஏப்ரல் 11 முதல் 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் (PwD) மற்றும் அத்தியாவசியப் பணிகளில் உள்ளவர்களுக்கான தபால் வாக்குப்பதிவு தொடங்கியது. தகுதியுள்ள வாக்காளர்கள் படிவம் 12D மூலம் விண்ணப்பித்து, தேர்தல் ஆணையத்தின் மூலம் வீட்டிலிருந்தே அல்லது பிரத்யேக மையங்களில் (PVC) வாக்களிக்கலாம். ஏப்ரல் 18, 20 தேதிகளில் காவலர்கள் மற்றும் தேர்தல் பணியாளர்கள் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் அலுவலர்கள், காவலர் மற்றும் வீடியோகிராபர் குழுவினர் வீடு தேடி வந்து தபால் வாக்குகளைச் சேகரிக்கின்றனர்.வாக்களித்த தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கை நாளுக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த செயல்முறை, அந்தந்த வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில், ரகசியத்தன்மை காக்கப்பட்டு, வீடியோ பதிவுடன் (Videography) நடைபெறுகிறது. EVM இயந்திரங்களில் வாக்குகள் எண்ணப்படுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக தபால் வாக்குகள் எண்ணப்படும்.



# சுந்தர் சியை 'சினிமா சங்கி' என விளாசிய பி.டி.ஆர்!" ஏ.சி. சண்முகம் தயாரிப்பில் சுந்தர் சி நடிக்கும் சினிமா இது

மதுரை ஏப். 13-

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியில் திமுக வேட்பாளர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் மற்றும் அதிமுக கூட்டணி வேட்பாளரான இயக்குனர் சுந்தர் சி ஆகியோரிடையே தேர்தல் களம் தற்போது 'நேரடித் தாக்குதல்' தளமாக மாறியுள்ளது.

*பி.டி.ஆர்இன் அனல் பறக்கும் பேச்சு:* மாநகராட்சி 56வது வார்டு முரட்டன்பத்திரி பகுதியில் வாக்கு சேகரித்த பி.டி.ஆர், அரசியலில் எப்போதும் நாகரிகத்தைக் கடைப்பிடிப்பவன் நான். ஆனால், மீண்டும் மீண்டும் பொய்ப் பிரச்சாரம் செய்யும் இந்தத் தீய சக்திகளைப் பேச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். இந்த 'சினிமா சங்கி' தனது அடுத்த தொழிலுக்காகவும், பெரிய நடிகராக ஆவதற்காகவும் மதுரையை ஒரு களமாகப் பயன்படுத்துகிறார். இந்தத் தேர்தல் களத்தின் தயாரிப்பாளர் ஏ.சி. சண்முகம் என்றால், அதில் நடிக்கும் நடிகர் இந்த சுந்தர் சி. இவர்களைப் போன்ற கபடவேடதாரிகளை மதுரையின் வரலாறு என்றைக்குமே ஏற்றுக்கொண்டதில்லை."

*சவால்:* "எல்லோரும் நெஞ்சைத் தட்டிச் சொல்வோம்... நாம இந்த மண்ணின் காரன்டா, இதுல நீ யாரு? பாத்துருவோம் ஒரு கை!" என மதுரைக்கே உரிய பாணியில் அதிரடி சவால் விடுத்தார். எதிர்த்துப் போட்டியிடுபவர்கள் இந்த முறை டெபாசிட் கூட வாங்க விடாமல் செய்ய வேண்டியது வாக்காளர்களின் கடமை என்றும், இது மதுரையின் சுயமரியாதை சம்பந்தப்பட்ட விஷயம் என்றும் அவர் பேசினார்.



# "மகளிருக்கு மாதந்தோறும் ரூ. 2,000; தீர்வு காணச் சிறப்புச் சேவை மையங்கள்

## எம்பி கே. ஈஸ்வரசாமியுடன் இணைந்து அனல் பறக்கும் பிரச்சாரம்

உடுமலை ஏப். 13-

திருப்பூர் மாவட்டம், உடுமலை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் திரு. மு. ஜெயக்குமார் அவர்கள், இன்று உடுமலை நகராட்சிக்குட்பட்ட 15, 16, 17 மற்றும் 20 ஆகிய வார்டுகளில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி அவர்களுடன் இணைந்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வாக்குறுதிகள்: "திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக்கூறிய வேட்பாளர், அனைத்து மகளிருக்கும் ரூ. 8,000 மதிப்பிலான கூப்பன் மற்றும் மாதந்தோறும் ரூ. 2,000 வழங்கப்படும்" எனப் பொதுமக்களிடம் வாக்குறுதி அளித்தார்.

*சேவை மையங்கள்:* உடுமலை நகரின் அனைத்துப் பகுதிகளிலும் பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிய 'சிறப்புச் சேவை மையங்கள்' அமைக்கப்படும் என்றும், அதன் மூலம் அதிகாரிகளுடன் பேசி பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்படும் என்றும் அவர் சூளுரைத்தார்.

தேர்தல் தேதி: வரும் 23.04.2026 அன்று நடைபெறும் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே. ஈஸ்வரசாமி, நகர கழகச் செயலாளர் வேலுச்சாமி, நகர மன்றத் தலைவர் மத்தீம், கோவில் அறங்காவலர் தலைவர் கணேச மூர்த்தி, மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மகளிர் அணி, இளைஞர் அணி எனப் பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

# நயினார் நாகேந்திரனை ஆதரித்து சாத்தூரில் நிதின் நபின் ரோடு ஷோ

சாத்தூர், ஏப்.13-

சாத்தூர் சட்டப்பேரவை தொகுதியின் பாஜக வேட்பாளர் நயினார் நாகேந்திரனை ஆதரித்து பாஜகவின் தேசியத் தலைவர் நிதின் நபின் பங்கேற்ற ரோடு ஷோ இன்று நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் பாஜக சார்பில் அக்கட்சியின் மாநில தலைவர் நைனார் நாகேந்திரன் போட்டியிடுகிறார். நைனார் நாகேந்திரனுக்கு ஆதரவாக கட்சியின் மாநில மற்றும் தேசிய நிர்வாகிகள் பலர் சாத்தூர் தெ?குதியில் தொடர்ந்து வாக்கு சேகரித்து வருகின்றனர். அந்த வகையில் பாஜக வேட்பாளர் நயினார் நாகேந்திரனை ஆதரித்து, அக்கட்சியின் முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை நேற்று பிரச்சாரம் செய்தார். அவரைத் தொடர்ந்து சாத்தூரில் இன்று, பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் ரோடு ஷோ நடைபெற்றது.



இதற்காக டெல்லியில் இருந்து விமானம் மூலம் நேற்று காலை மதுரை வந்த நிதின் நபின், ஹெலிகாப்டர் மூலம் சாத்தூரில் உள்ள தனியார் பள்ளியில் வந்து இறங்கினார். பின்னர் காரில், மதுரை பேருந்து நிறுத்தம் பகுதியில் இருந்து திறந்த வாகனத்தில் ரோடு ஷோவில் பங்கேற்றார். அவருடன் நடிகர் சரத்குமார், நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் உடன் வந்தனர்.

வழி நெடுகிலும் சாலையின் இருபுறமும் கூடியிருந்த பாஜகவினர் கொடிகளை அசைத்தும், மலர்களை தூவியும், மாலை அணிவித்தும் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். வரும் வழியில் குழந்தைகளை தூக்கி கொஞ்சியும், தனக்கு அணிவிக்கப்பட்ட மாலை மற்றும் துண்டுகளை கட்சியினருக்கு வழங்கியும் நிதின் நபின் தாமரை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். மதுரை பேருந்து நிறுத்தத்தில் தொடங்கி, பேருந்து நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், அரசு மருத்துவமனை சாலை வழியாக முக்குராந்தல் பகுதியில் ரோடு ஷோ நிறைவடைந்தது. இதில், பாஜக, அதிமுக உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் சைக்கிள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. தென்காசி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவுபடி, வாசுதேவநல்லூர் பேரூராட்சியில் செயல் அலுவலர் காதர் தலைமையில் சைக்கிள் பேரணி நடைபெற்றது. முன்னதாக தேர்தலில் 100% வாக்கு பதிவு செய்வதை விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. பின்பு நகரின் முக்கிய வழிகளில் சைக்கிள் பேரணி நடைபெற்றது. விழாவில் பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000